**தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்**
**திருப்பூர் மாவட்ட வானிலை சார்ந்த வேளாண் அறிக்கை**
**(17.08.2017முதல் 21.08.2017)**

**அறிக்கைஎண் 065/2017** **தேதி :16.08.2017**

**மாநிலத்தின் கடந்தவாரவானிலை**

தமிழகத்தின் பெரும்பாலான பகுதிகளில் பகல்நேர வெப்பநிலை 28°செ முதல் 37°செ ஆகவும், இரவுநேர வெப்பநிலை 21°செ முதல் 28°செ ஆகவும், கொடைக்கானல் மற்றும் உதகமண்டலம் பகுதிகளில் பகல்நேர வெப்பநிலை 17°செ முதல் 21°செ ஆகவும், இரவுநேர வெப்பநிலை 11°செ முதல் 13°செ ஆகவும் பதிவானது. தமிழகத்தில் ஆங்காங்கே மழை பெறப்பட்டது.

**எதிர்பார்க்கப்படும் வானிலை திருப்பூர் (17.08.2017 முதல் 21.08. 2017)**

வரும் நாட்களில் வானம் பெரும்பாலும் மேகமூட்டத்துடன் காணப்படும். அடுத்த ஐந்து நாட்களுக்கும் மழை எதிர்பார்க்கப்படுகிறது. அதிகபட்ச வெப்பநிலை 30°செ முதல் 32°செ ஆகவும், குறைந்தபட்ச வெப்பநிலை 22°செ முதல் 24°செ ஆகவும், காலை நேர காற்றின் ஈரப்பதம் 90 முதல் 95 சதவிகிதமாகவும், மாலை நேரகாற்றின் ஈரப்பதம் 80 முதல் 85 சதவிகிதமாகவும் பதிவாக வாய்ப்புள்ளது. சராசரியாக காற்றின் வேகம் மணிக்கு 8-10 கி.மீ அளவுக்கு பெரும்பாலும் தென்மேற்கு திசையிலிருந்து வீசக்கூடும்.

| தேதி | மழை (மி.மீ) | அதிகபட்ச வெப்ப நிலை (°செ) | குறைந்த பட்ச வெப்ப நிலை (°செ) | மேக மூட்டம் (ஆக்டா) | அதிகபட்ச காற்றின் ஈரப்பதம் (%) | குறைந்த பட்ச காற்றின் ஈரப்பதம் (%) | காற்றின் வேகம் (கி.மீ/ மணி) | காற்று வரும் திசை |
|---|---|---|---|---|---|---|---|---|
| 17.08.17 | 10 | 32 | 24 | 7 | 90 | 80 | 8 | தெற்கு |
| 18.08.17 | 10 | 31 | 23 | 6 | 90 | 80 | 10 | தெற்கு |
| 19.08.17 | 5 | 31 | 23 | 7 | 95 | 85 | 10 | தென்மேற்கு |
| 20.08.17 | 3 | 31 | 23 | 7 | 95 | 85 | 8 | தென்மேற்கு |
| 21.08.17 | 10 | 30 | 22 | 7 | 90 | 80 | 8 | தென்மேற்கு |

**வேளாண் அறிவுரை**

- ✓ பெறக்கூடிய மழையைப் பயன்படுத்தி மானாவாரியில் தீவனச்சோளம் அல்லது தட்டப்பயிர் விதைப்பு மேற்கொள்ளலாம்.
- ✓ மழை எதிர்பார்க்கப்படுவதால் பார் மற்றும் சாலில் தக்காளி நாற்றுகளை நடவு செய்வதன் மூலம் தண்ணீர் தேக்கத்தை தடுத்து தக்காளி பயிர் அழுகலை குறைக்கலாம்.
- ✓ மாடுகளை குளக்கரைகளில் புதிதாக முளைத்த தாவரங்களை மேய்ச்சலுக்கு விட வேண்டாம். இதனால் வரக்கூடிய துள்ளுமாறி நோயைத் தவிர்க்கலாம்.
- ✓ மழை எதிர்பார்க்கபடுவதால் நீர் பாசனத்தை தள்ளிப்போடவும்.
- ✓ காற்றின் ஈரப்பதம் அதிகமாக காணப்படுவதால் நிலக்கடலையில் டிக்கா இலைப்புள்ளி நோய் வர வாய்ப்புள்ளது. விவசாயிகள் வயலை நன்கு கண்காணித்து தாக்குதல் காணப்பட்டால் ஒரு எக்டருக்கு கார்பன்டெசிம் 500கி அல்லது மான்கோசெப் 1000கி என்றளவில் கலந்து தெளித்து கட்டுப்படுத்தவும்.

**குறுஞ்செய்தி**

- ✓ பெறக்கூடிய மழையைப் பயன்படுத்தி மானாவாரியில் தீவனச்சோளம் அல்லது தட்டப்பயிர் விதைப்பு மேற்கொள்ளலாம்.

**பேராசிரியர் மற்றும் தலைவர்**
**வேளாண் காலநிலை ஆராய்ச்சி மையம்**
**த.நா.வே.ப.கழகம், கோவை.**